வலியுறுத்தித் தெரிவித்துள்ளனர். மேலும், இலங்கை வாழ் மீனவர்களும் அவர்களுடைய எல்லையை மீறி நம்முடைய எல்லைக்கு வருகிறார்கள். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நமது மீனவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கடலில் சங்கு பிடித்து விற்பது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒன்று. ஜெகதாப்பட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் சங்குகளைப் பிடிப்பதிலே தற்சமயம் முழு ஆர்வத்துடன் செயல்படுவதால், குறிப்பாக சங்கு இலங்கைக் கடற்கரை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலே அதிகம் கிடைப்பதால் அடிக்கடி தமிழக மீனவர்கள் அவர்களுடைய எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

மேற்கண்ட சம்பவங்களினால் எவ்வித உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்படவில்லை. இனி தமிழகக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லக்கூடாது என்று நமது மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) டாக்டர் அம்பேத்கார் மற்றும் பாரதிதாசன் நூற்றாண்டு விழாக்களையொட்டி கைதிகளுக்குத் தண்டனைக் காலத்தை குறைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய மாபெரும் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டு விழாவும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவும் ஒருங்கிணைந்து நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்ற ஆண்டாகும். இவர்களுக்கு நூற்றாண்டு விழா அமையும் இந்த ஆண்டில் தமிழக அரசு சார்பில் அவர்களை நினைவுபடுத்தும் வகையில் தண்டனை பெற்று, தமிழ்நாட்டுச் சிறைகளில் இருக்கும் கைதிகளுக்கு தண்டனைக் காலத்தைக் குறைத்து, விடுதலை வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி 12 ஆண்டுகள் முழுமையாக சிறைவாசம் முடித்த ஆயுள் தண்டனைக் கைதிகள் 72 பேருக்கு அவர்கள் எஞ்சிய தண்டனைக் காலத்தைக் குறைத்தும், பல்வேறு நிலைகளிலே சிறை வாசம் செய்து வரும் 866 கைதிகளையும் மற்றும் கொலை, கொள்ளை ஆகியவற்றைத் தவிர ஏனைய குற்றங்களுக்காக தண்டனை பெற்று வரும் 54 பெண் கைதிகளையும், மொத்தம் 992 கைதிகளை

1990 ஏப்ரல் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் தலைவர்களின் நினைவாக 14–4–1990 தமிழ்ப் புத்தாண்டு அன்று விடுதலை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு.)

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினம் மற்றும் ஜகதாப்பட்டினத்திலிருந்து சென்ற மீனவர்களை, விடுதலைப் புலிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் கடத்திச் சென்றது மற்றும் அவர்கள் விடுவிக்கப்பட்டது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு, விதி 110(2)ன்கீழ் அளிக்கப்படும் அறிக்கையின்மீது எந்தவித விவாதமும் கூடாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு.......

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நமது மீனவர்களை விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும், அப்படி தாக்கப்பட்டு துன்புற்றவர்களை நமது அமைச்சர் அவர்கள் ஆறுதல் செய்ததாகவும் பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வந்திருக்கிறதே, அது பற்றி இதில் ஒன்றும் இல்லேயே, அது பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான் சொன்னேன், இது தொடர்பாக எந்த விவாதமும் கூடாது என்று. (குறுக்கீடு) அப்படி எல்லாம் வாதத்தை நீட்டிக்கக்கூடாது. பிறகு விதிமுறைகளுக்குப் புறம்பாகப் போய்விடும். உட்காருங்கள்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது மீனவர்களுடைய நிலைமை மிகவும் அபாயகரமான நிலைமைக்கு இப்போது போய்க்கொண்டிருக்கிறது. இலங்கை அரசு என்ன செய்கிறதோ அது நமக்குத் தெரியாது. அது ஒரு பக்கம். விடுதலைப் புலிகள், ஒரு அரசு மாதிரி ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மீனவர்களின் பாதுகாப்புக்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி எங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விவாதிக்க நீங்கள் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தர வேண்டும். மீனவர்களுக்கு ஒரு பாதுகாப்பு தேவை. கடல் எல்லைகளை எல்லாம் இரண்டு அரசாங்கங்களுக்கு இடையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்து, வரையறுத்துத் தர வேண்டி இருக்கிறது. இப்போது நிலைமை அத்து மீறி, அனுதினமும் நூற்றுக்கணக்கான ஆட்களைப்